2024 பிப்ரவரி 22]
கோரிக்கை கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. தகவல் கோரல்

(அ) காவிரியின் குறுக்கே மேகதாது அணையைக் கட்டுதல், காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் நடைபெற்ற விவாதத்திற்கு எதிர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். நான் காலையிலே எதிர்க்கட்சிக் கொறடா அவர்களிடம் சொல்லி அனுப்பினேனே! இன்றைக்கு வேண்டாம், இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது என்று சொன்னேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இன்றைக்குத்தானே கடைசி தேதி. இன்றைக்கு பேரவைக் கூட்டம் முடிந்தபிறகு, இனிமேல் சட்டமன்றம் கூடாதே! வேறு என்றைக்கு எடுக்க முடியும்? நாட்கள் இருந்தால் வேறு நாளில் எடுத்திருக்கலாம். இது முக்கியமான பிரச்சினை. தமிழ்நாட்டினுடைய மிக முக்கியமான ஒரு பிரச்சினையைப்பற்றி அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்று ஒரு குற்றச்சாட்டை, என்னை நோக்கி வைத்தீர்கள். ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) உட்கார்ந்துவிடுங்கள், சொல்லிவிடுகிறேன். சட்டமன்றக் கூட்டம் திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய 4 நாட்களில் நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கையின்மீது விவாதங்கள் நடைபெற்று, இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்லவிருக்கிறார்கள். நீங்கள் குறைந்த நாட்கள்தான் சட்டமன்றக் கூட்டத்தை வைத்தீர்கள்*

[பேரவைத் தலைவர்] [2024 பிப்ரவரி 22 என்று சொன்னீர்கள். இதைப்போல முன்பு எப்படி நடைபெற்றது என்பதை நான் பார்த்துவிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னேன். 2004 ஆம் ஆண்டில், நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து, பின்னர் ஒரே நாளில் விவாதித்து, அன்றைக்கே பதில் சொல்லி முடித்திருக்கிறீர்கள். அதை உங்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சொல்கிறேன். தற்போது, நீங்கள் பேசுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும்கட்சியின் தேர்தல் அறிக்கையிலேயே 100 நாட்கள் சட்டமன்றம் நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேண்டுமானால், அது எத்தனையாவது அறிவிப்பு என்று நான் சொல்கிறேன். நீங்கள் ஒவ்வொரு முறையும் என்ன சொல்கிறீர்கள்? தேர்தல் அறிவிப்பின்படி, நாங்கள் செயல்படுத்துவோம் என்று சொல்கிறீர்கள். அதைத்தான், செயல்படுத்துங்கள் என்று நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நடைபெறும். இப்போது தேர்தல் இல்லையென்றால், நடைபெறும்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக மிக முக்கியமான பிரச்சினை, காவிரி நதிநீர்ப் பிரச்சினை. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு முழுவதுமே தெரியும். இருந்தாலும், என்ன காரணத்திற்காகவோ அதில் முழுமையாக நடவடிக்கை எடுக்கப்படாமலிருப்பது வருத்தமளிக்கிறது. காவிரி நடுவர் மன்றம்–Cauvery Water Disputes Tribunal அளித்த தீர்ப்பின்படி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்குட்பட்டு செயல்படுத்துவதற்கு மட்டும்தான்—காவிரி நீர் மேலாண்மை ஆணையம்–Cauvery Water Management Authority, காவிரி நீர் முறைப்படுத்தும் குழு–Cauvery Water Regulation Committee ஆகியவை உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில்தான் அமைக்கப்பட்டன. எனவே, இந்த ஆணையத்தினுடைய பணிகளும், குழுவின் பணிகளும் முறையாக வரையறுக்கப்பட்டுள்ளன. அதன்படி, என்னவெல்லாம் வரையறுக்கப்பட்டுள்ளன என்ற விவரத்தை நான் சொல்கிறேன்.

(1) காவிரி நதி நீரைத் தேக்குதல், பகிர்மானம் செய்தல், முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்; (2) காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் துணையுடன் அணைகளின் செயல்பாட்டை மேற்பார்வையிடுதல் மற்றும் அவற்றிலிருந்து

2024 பிப்ரவரி 22] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

நீரை பாசனம் மற்றும் இதர தேவைகளுக்கு வழங்குவதை முறைப்படுத்துதல்; (3) கர்நாடக, தமிழக எல்லையில் தற்போதுள்ள பிலிக்குண்டு நீர் அளவை நிலையத்தில் கர்நாடக அரசு நீர் வழங்குவதைக் கண்காணித்தல் ஆகியவைதான் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தினுடைய செயல்பாடுகள். அதை மீறி, தற்போது 28-வது காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் நடைபெற்ற விவாதங்கள் நமக்கு வேதனை அளிக்கின்றன. புதிதாக மேகதாது அணை கட்டுவதுபற்றி விவாதிக்க இந்த ஆணையத்திற்கோ, குழுவிற்கோ எந்த அதிகாரமும் இல்லை. அதனால்தான், எங்களது ஆட்சிக் காலத்தில் கர்நாடக அரசு மேகதாது அணை கட்டுவது குறித்த விவாதத்தை ஆணையத்தின்முன் கொண்டுவர பல முயற்சிகள் மேற்கொண்டபோதும், அதை விவாதிக்கும் அதிகாரம் ஆணையத்திற்கு இல்லை என்றும், இதனை விவாதப் பொருளாக சேர்க்கவே கூடாது என்றும் கடுமையாக எதிர்த்தோம்.

2018 ஆம் ஆண்டு மேகதாது அணை குறித்த பிரச்சினை மத்திய நீர்வளக் கமிஷன் பார்வைக்குச் சென்றபோது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, 5-12-2018 அன்று மத்திய நீர்வளக் கமிஷனின் அன்றைய இயக்குநர்மீது உச்ச நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடர்ந்தது. அதைத் தொடர்ந்து, எங்கள் ஆட்சி இருக்கின்ற வரை, மத்திய நீர்வளக் கமிஷனோ, காவிரி மேலாண்மை ஆணையமோ மேகதாது பிரச்சினை குறித்த பொருளை அதனுடைய கூட்டத்தில் கொண்டுவர முயற்சிக்கவில்லை. நாங்கள் தொடுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு இன்னும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றது.

முற்பகல் 11-40

மேலும், இதுதொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எங்கள் ஆட்சிக் காலத்தில் மேகதாது அணை பற்றிய விவாதம், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தில் கொண்டுவர அனுமதிக்கப்பட்டதே இல்லை. ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 1-2-2024 அன்று ஆணையத்தின் வரையறுக்கப்பட்ட பணிவரம்பிற்கு அப்பாற்பட்டு, அணை கட்டுவது குறித்த விவாதம் 28-வது காவிரி மேலாண்மைக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. கர்நாடக அரசும், மேகதாது அணை குறித்து ஆணையத்தின் விவாதப் பொருளாக தந்திரமாகச் சேர்த்துவிட்டார்கள். மேகதாதுவைப் பற்றிய விவாதம் நம்முடைய எதிர்ப்பையும்மீறி சேர்க்கப்பட்டிருந்தால்,

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2024 பிப்ரவரி 22 நீங்கள் அக்கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்திருக்க வேண்டும். மேகதாது அணை விவகாரத்தை அனுமதித்ததோடு மட்டுமல்லாமல், விவாதத்தில் ஏன் கலந்து கொண்டீர்கள்? இதனால், தமிழ்நாட்டிற்கு எதிரான ஓர் இக்கட்டான சூழ்நிலை ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. இப்போது ஆணையம் அதன் அதிகார வரம்பிற்குச் சம்பந்தம் இல்லாத மேகதாது அணை விவகாரம் குறித்த கருத்தை மத்திய நீர்வள* Commission*-க்கு பரிந்துரை செய்துள்ளது. இந்நிலையில், கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு திரு. சித்தராமையா அவர்களால், கர்நாடக சட்டமன்றத்தில், காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. மேகதாது அணை கட்டுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக கர்நாடக முதலமைச்சர் அவர்கள் கர்நாடக சட்டமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்கள். காவிரி நதி, தமிழ்நாட்டின் ஜீவ நதி. மேகதாது அணை கட்டப்பட்டால், மேட்டூருக்குத் தண்ணீர் வராது. அணை வறண்டுவிடும். மேட்டூர் அணையில் நீர் இல்லையென்றால், டெல்டா பாசனப் பகுதி பாலைவனமாக மாறிவிடும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இவை எல்லாம் பதிவு செய்யப்பட்டுவிட்டன.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இது முக்கியமானது. இதைவிட முக்கியமான விஷயம் வேறு என்ன இருக்கிறது? காவிரி நீர்தான் முக்கியமானது. எவ்வளவு கஷ்டப்பட்டு, உச்ச நீதிமன்றம் வரை சென்று தீர்ப்பு வாங்கியிருக்கிறோம். அந்தத் தீர்ப்பைக்கூட நீங்கள் காப்பாற்ற முடியாமல் இருக்கிறீர்களே! காவிரி குடிநீரை ஆதாரமாகக் கொண்ட 20 மாவட்டங்களினுடைய மக்கள் பாதிக்கப்பட்டுவிடுவார்கள். காவிரி நீர் மேலாண்மை ஆணையம், மேகதாது அணை கட்டுவதற்கான பொருளை மத்திய நீர் வள* Commission*-க்கு அனுப்பியது டெல்டா பாசன விவசாயிகளிடத்தில் பெரும் அதிருப்தியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றது. இதுகுறித்து நான் சட்டமன்றத்தில் பேசுகின்றபோது, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் விரிவான பதிலை அளிக்கவில்லை. காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் செயல்பாடு குறித்து நான் சொல்லவில்லை. ஏற்கெனவே அதை நீக்கியிருக்கிறீர்கள். 'அயோக்கியத்தனம்' என்று சொன்னார். அந்த அளவிற்கு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தில் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது.*

2024 பிப்ரவரி 22] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

காவிரி நீர் மேலாண்மை ஆணையம்மூலம் காவிரி நீர்வள Commission*-க்கு என்ன விவரம் அனுப்பப்பட்டிருக்கின்றது என்ற செய்தி இன்றுவரை வெளியிடப்படவில்லை. சட்டமன்றத்தில் வெளியிடுவீர்கள் என்று நாங்களும் இரண்டு நாட்கள் எதிர்பார்த்தோம். காவிரி நீர் மேலாண்மை ஆணையம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு என்ன? அந்தப் பொருள் என்ன?* Central Water Commission*-க்கு அந்த முடிவு அனுப்பப்பட்டு,* Central Water Commission*-ம் அதற்கு ஏதாவது அனுமதி கொடுத்துவிட்டால் என்ன ஆகும்? இதைப்பற்றிய விவரங்கள் இன்னும் தெரியவில்லை. அதனால்தான் நாங்கள் இன்று* zero hour*-ல் அந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச வேண்டியுள்ளது.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *ஆகவே, நீங்கள் உடனடியாக என்ன செய்திருக்க வேண்டும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இருங்கள். நான் கூறிவிடுகிறேன். அதன்பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நீங்கள் உங்கள் கருத்துகளை முழுமையாகத் தெரிவித்துவிட்டீர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இது மிகவும் முக்கியமானது. சட்டமன்றத்தில் விவாதிக்க இதைவிட முக்கியமான விஷயம் என்ன இருக்கிறது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுவதற்குத் தயாராக இருக்கிறார்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இன்னும் முழுமையடையாமல் இருக்கிறது. முழுமையாகத் தெரிந்தால்தானே அமைச்சரிடமிருந்து முழுமையான பதில் கிடைக்கும்.*

[*2024 பிப்ரவரி 22*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தெளிவாக இருக்கிறார்கள். நீங்கள்தான் கூறினீர்கள், அவ்வளவு கடினமான வார்த்தையைக் கூறி கண்டித்திருக்கிறார்கள் என்று. . . (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து பேசவிடுங்கள். இது 50 ஆண்டுகால பிரச்சினை. இது தமிழ்நாட்டினுடைய ஜீவாதாரப் பிரச்சினை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள், யாராவது ஆளுங்கட்சி பதில். . . (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இன்றைக்கு டெல்டா மாவட்ட விவசாயிகள், தமிழ்நாடு விவசாயிகள் 50 ஆண்டுகாலம் போராடி, சட்டப் போராட்டம் நடத்தி, உச்ச நீதிமன்றத்தில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *யாரும் அதை மறுக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர்கள் இருவர் பதில் கூற வேண்டியிருக்கிறது. நீங்கள் சுருக்கமாகப் பதிவு செய்துவிட்டீர்கள். நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதிலைக் கேளுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தைக் கண்டித்து இன்றைக்கு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருக்க வேண்டும். ஏனென்றால், உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் நடந்துகொள்ளவில்லை. அது தன்னுடைய அதிகாரத்தைமீறி செயல்பட்டிருக்கிறது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் பதில் அளிக்க வேண்டும். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இருங்கள். என்னைப் பேசவிடமாட்டேன் என்கிறீர்களே! என்னைப் பேச அனுமதியுங்கள். சட்டமன்றத்திற்கு வரவேண்டும் என்கிறீர்களா? வேண்டாம் என்கிறீர்களா? இது முக்கியமான பிரச்சினை. இதைவிட வேறு என்ன பிரச்சினை இருக்கிறது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இவ்வளவு நேரம் பேசியிருக்கிறீர்கள். உங்களை யாரும் எதுவும் கேட்கவில்லை. நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள். (குறுக்கீடுகள்)*

2024 பிப்ரவரி 22]

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நான் பதிவு செய்வதற்கு அனுமதி அளியுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். நீங்கள் இவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதி அளித்திருக்கிறேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அவர் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார். நீங்கள் ஏன் அனுமதி மறுக்கிறீர்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zero hour-ல் *நீங்கள் தெளிவாகப் பதிவு செய்துவிட்டீர்கள். இப்போது அதற்குப் பதில் கூற வேண்டாமா? (குறுக்கீடுகள்) நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இதைவிட வேறு என்ன பிரச்சினை இருக்கிறது? இன்றைக்கு டெல்டா மாவட்ட விவசாயிகள் கொதித்துப்போய் இருக்கிறார்கள். 50 ஆண்டுகாலப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட அரசு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுவார்கள். நீங்கள் பேசி முடியுங்கள் என்று சொல்கிறேன், இதில் என்ன தவறு இருக்கிறது?*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நீங்கள் என்னை பேசவிடமாட்டேன் என்கிறீர்களே! இடைமறிக்காமல் என்னைப் பேசவிட்டிருந்தால் இந்நேரத்தில் என்னுடைய பேச்சை முடித்திருப்பேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் எவ்வளவு நேரம் பேசுவீர்கள்? சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

முற்பகல் 11-45

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகதாது அணை குறித்த 28-வது கூட்டத்தில் என்ன பேசினார்கள் என்ற விவரம் இதுவரை சட்டமன்றத்தில் தெரிவிக்கப்படவில்லை. உடனடியாக, இதற்காக சட்டமன்றத்தில் ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்க வேண்டும். ஏனென்றால், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு, உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படிதான் அவர்களுக்கு அதிகாரம்*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2024 பிப்ரவரி 22

இருக்கிறது. மேகதாது அணை கட்டுவது குறித்த பொருளை கூட்டத்தில் விவாதிக்க அதிகாரம் இல்லை. அப்படிப்பட்ட நிலைமையில், சட்டமன்றத்தில் இந்த அரசு உடனடியாக 28–வது கூட்டத்தில் 'மேகதாது அணை பொருள் குறித்து விவாதிப்பது தவறு, இது கண்டனத்திற்குரியது' என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, இதற்கு தடையாணை வாங்கியிருக்க வேண்டும். இதை வாங்காததனால், மத்திய நீர்வள ஆணையத்திற்கு அனுப்பிவிட்டார்கள். அதாவது, காவிரி நீர் மேலாண்மை ஆணையம், மத்திய நீர்வள ஆணையத்திற்கு அனுப்பிவிட்டது. மத்திய நீர்வள ஆணையம் ஏதாவது முடிவு எடுத்துவிட்டால், என்னவாகும்? அதற்கு என்ன பதில் இருக்கிறது? ஒன்றும் கிடையாது. ஏற்கெனவே கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்துவிட்டது. இதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். இது மிக முக்கியமான பிரச்சினையில்லையா!

ஆக, இந்த அரசாங்கம் வேண்டுமென்றே திட்டமிட்டு அலட்சியமாக இருந்த காரணத்தால், 50 ஆண்டு காலம் போராடி வாங்கிய தீர்ப்புக்கு தற்போது குந்தகம் ஏற்பட்டுவிடுமோ என்ற ஐயம் டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது; தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த அரசு உடனடியாக இதற்குரிய தீர்வைக் காண வேண்டும். இல்லாவிட்டால், தற்போது கர்நாடக அரசு நினைப்பதுபோன்று மேகதாதுவில் அணை கட்டுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்ற ஒரு வாய்ப்பை இந்த அரசு உருவாக்கிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. K. மாரிமுத்து, திரு. இரா. அருள், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. ஜி.கே. மணி மற்றும் திருமதி வானதி சீனிவாசன் ஆகியோர் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் கருத்துகளை ஓரிரு வரிகளில் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் வாழ்வாதாரமாக காவிரியாறு திகழ்கிறது. குறிப்பாக, 18 மாவட்டங்களின் குடிநீர்த் தேவைகளையும், டெல்டா மாவட்டங்களுடைய பாசன வசதிகளையும் நிறைவேற்றுகின்ற

2024 பிப்ரவரி 22] [திரு. ட்டி. இராமச்சந்திரன்]

ஜீவாதார நதியாக காவிரியாறு திகழ்கிறது. கர்நாடக அரசு காவிரியாற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டிவிட்டால், ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் பாலைவனமாக மாறிவிடும் அபாயம் இருக்கிறது. கர்நாடக சட்டமன்றத்தின் கடந்த நிதிநிலை அறிக்கையில், கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமையா அவர்கள், காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டியே தீருவோம் என்று கூறி, அதற்காக நிதி ஒதுக்கீடும் செய்து, ஓர் உயர்மட்டக் குழுவையும், இரண்டு உப குழுக்களையும் உருவாக்கிவிட்டார். கர்நாடகாவில் யார் ஆட்சிக்கு வந்தாலும், காவிரி விவகாரத்தில் தொடர்ந்து ஒன்றுபட்டு நிற்கிறார்கள். ஆகவேதான், உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தீர்ப்பு ஆகியவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், காவிரியாற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட முயற்சிக்கின்ற கர்நாடக அரசுக்கு எதிராக, ஒன்றிய அரசை நாம் வலியுறுத்தி, அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஆகவே, அதற்கான சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, உச்ச நீதிமன்றத்தை அணுகி, கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசு, காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டுவதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது. இது தமிழ்நாட்டிற்கு, குறிப்பாக காவிரி பாசன மாவட்டங்களுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். இதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை தமிழக அரசு அதிரடியாக, உடனடியாக எடுக்க வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடக-தமிழக எல்லையான மேகதாதுவில் அணை கட்டுவதற்கு கர்நாடக அரசு தொடர்ந்து

[திரு. ஜி.கே. மணி] [2024 பிப்ரவரி 22

முயற்சி எடுத்து வருகிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நம்முடைய தமிழக அரசும் தொடர்ந்து 50 ஆண்டு காலமாக முயற்சி எடுத்து வருவதை நான் மறுக்கவில்லை. இப்போது இருக்கிற அரசும்கூட, மத்திய அரசை அணுகியிருக்கிறது. மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை அணுகி, கண்டனத்தையும் தெரிவித்திருக்கிறது; அதை நான் மறுக்கவில்லை. ஆனாலும்கூட, கர்நாடக அரசு மேகதாதுவில் எப்படியாவது அணை கட்ட வேண்டும் என்று விடாப்பிடியாக தீர்மானித்து, கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின்போது, நிதிநிலை அறிக்கையில் அதற்காக நிதி ஒதுக்கீடும் செய்திருக்கிறது. கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு திரு. சித்தராமையா அவர்கள் என்னுடைய நண்பர்தான், அவர் மேகதாதுவில் அணை கட்டியே தீருவோம் என்று உறுதியாக இருக்கிறார்; அதில் மாற்றுக் கருத்தே இல்லை. அத்துடன் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் தன்னுடைய கடமையைச் செய்யத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டையும் நான் இங்கே சுமத்துகிறேன்.

முற்பகல் 11–50

காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு இருக்கிறது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பும் இருக்கிறது. அதையும் மீறி கர்நாடக மாநில அரசு அணை கட்ட முயற்சிக்கிறது என்று சொன்னால், மத்திய அரசு அனுமதிக்கக்கூடாது என்பது மட்டுமல்ல; காவிரி நீர் மேலாண்மை ஆணையம் கர்நாடகத்திற்கு ஒருதலைபட்சமாக நடக்கிறது என்ற குற்றச்சாட்டை முன் வைத்து, அந்த நடவடிக்கையை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும், தமிழக மக்களின் சார்பிலேயும் வன்மையாகக் கண்டிக்கிறேன். அதைத்தான் நேற்றும்கூட இந்த அவையில் பேச முற்பட்டேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தடுத்துவிட்டீர்கள்; அனுமதிக்கவில்லை. இப்போது இந்த மன்றத்தில் கண்டனம் தெரிவிக்க வேண்டும். ஆணையத்தினுடைய நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்து, தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அதேநேரத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சிகளும், தமிழ்நாட்டு மக்களும் ஒன்றிணைந்து நிற்கிறார்கள்; ஒரே குரலில் ஒலிக்கிறார்கள் என்ற செய்தி மத்திய அரசுக்கு எட்ட வேண்டும்; கர்நாடக அரசிற்கு எட்ட வேண்டும். தமிழ்நாட்டு மக்கள் ஒன்று சேர இந்தச் செய்தி ஒருங்கிணைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, எப்பாடுபட்டாவது, தமிழ்நாட்டின் உரிமைப் பிரச்சினை; வாழ்வாதாரப் பிரச்சினை; தலைநகர் சென்னை உட்பட 22 மாவட்டங்களின் குடிநீர்ப்

2024 பிப்ரவரி 22] *[திரு. ஜி.கே. மணி]*

பிரச்சினை; 12 மாவட்டங்களின் நீர்ப்பாசனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். இன்று விட்டுவிட்டால், எதிர்காலத்தில் தமிழ்நாடு பாலைவனமாக மாறிவிடும் என்பதை உணர்த்தி, அரசு போர்க்கால அடிப்படையில் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடர் நடக்கின்றபோது, ஆளுகின்ற அரசாங்கமே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால், அதற்குப் பிறகும்கூட, தொடர்ச்சியாக கர்நாடக அரசு இதுபோன்ற முயற்சிகளை எடுத்துக்கொண்டிருப்பது வருத்தத்திற்குரியது. அப்படியென்றால், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தீர்மானம் சரியான அழுத்தத்தை அவர்கள்மீது கொடுக்கவில்லையா அல்லது நம்முடைய தீர்மானம் கர்நாடக மாநில அரசுக்கு எந்த முறையில் சொல்லப்பட வேண்டுமோ அந்த முறையில் சொல்லப்படவில்லையா? ஏனென்றால், இப்போது இங்கேயிருக்கக்கூடிய அத்தனை கட்சிகளும் பேசியதைத்தான் கடந்த சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரிலே பேசினார்கள். மாநில அரசு பேசியது. மரியாதைக்குரிய மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் பேசினார். ஆனால், இந்தப் பிரச்சினை இரண்டு மாநில மக்களுடைய உணர்வுரீதியான பிரச்சினை. அதனால், சட்டமன்றப் பேரவையில் மரியாதைக்குரிய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் இது தொடர்பாக ஏற்கெனவே மத்திய அமைச்சரிடம் பேசியிருக்கிறார். அப்போது அவருடைய பதில் என்னவாக இருந்தது என்பதெல்லாம் இந்தச் சட்டமன்றப் பேரவையின் அவைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும், கர்நாடக மாநிலத்தில் புதிதாக அமைந்திருக்கக்கூடிய அரசு, இந்தப் பிரச்சினையில் இப்போது தீவிரம் காட்டுவது நம்முடைய மாநில அரசு எடுக்கின்ற முயற்சிகள் பலனளிக்கவில்லை என்பதைக் காட்டுவதாகவே உள்ளது. ஆகவே, இந்த விஷயத்தில் தமிழகத்தினுடைய உரிமைகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் விட்டுக்கொடுக்காமல், கூட்டணியாகவே நீங்கள் இருந்தாலும்கூட— அந்தக் கூட்டணியிடம் எப்படிப் பேச வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும்—அந்தக் கூட்டணிக் கட்சியிடம் பேசி, தமிழகத்திற்கு நீதி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென எங்கள் கோரிக்கையை வலியுறுத்தி, அமர்கிறேன்.*

[*2024 பிப்ரவரி 22*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இதுகுறித்து ஒரு நாள் பேசுகிறபோது, இதற்கான விளக்கத்தை நான் அன்றைக்கே தெரிவித்தேன். இருந்தாலும் இன்றைக்குக் கொஞ்சம் கோபத்தோடும், ஆவேசத்தோடும் இந்தப் பிரச்சினையை இங்கே வைத்திருக்கிறார். அவர் இன்றைக்குச் சொன்ன கருத்து என்னவென்றால்,* Cauvery Water Management Authority *என்று ஒன்றிருக்கிறது. அதில் நடந்த ஒரு விஷயத்தைத்தான் இங்கே கோபப்பட்டுச் சொன்னார். நீர்வளத் துறை* Tribunal *அமைத்தபோது, அது ஒரு தீர்ப்பு கொடுத்தது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து, எல்லோரும்* Supreme Court*-க்குச் சென்றோம்.* Supreme Court *அதன்மீது ஒரு தீர்ப்பு கொடுத்தது. அந்தத் தீர்ப்புதான் இறுதியானது. அந்தத் தீர்ப்பு என்ன சொன்னது என்றால், இரண்டு மாநிலங்களுக்கும் இடையில், இந்தத் தீர்ப்பையொட்டி, நீர் பங்கிடுவதிலே பிரச்சினை ஏற்படுமானால், அதைப் பற்றி விவாதித்து, அதற்குப் பரிகாரம் காணுவதற்காகத்தான்* Cauvery Water Management Authority *மற்றும்* Cauvery Water Regulation Committee*-யும் அமைத்தார்கள். ஆனால்,* Supreme Court *சொன்னதே தவிர, நெடுநாட்களாக அந்த ஆணையத்திற்கு,* Cauvery Water Management Authority*-க்கு தலைவர் நியமிக்கப்படவில்லை. இப்போது நாங்கள் வலியுறுத்திய பிறகு, தலைவரை நியமித்தார்கள்.*

முற்பகல் 11-55

அதன்பின், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'நாங்கள் போட்டோம். அப்போது எங்கள் காலத்தில் வரவில்லை' என்று சொன்னார். அவர்கள் காலத்தில் அந்தப் பிரச்சினையே வரவில்லை. ஏனென்று கேட்டால், ஆணையத்திற்கு தலைவரே இல்லை. அப்போது கூட்டமே நடக்கவில்லை. எங்களுடைய ஆட்சிக் காலத்திலே கூட்டங்கள் நடந்திருக்கின்றன. (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன், நீங்கள் சொல்வதைப் பின்னர் சொல்லுங்கள். இந்தக் கூட்டத்தில் நடந்ததைப்பற்றி சொல்லிவிடுகிறேன். பிப்ரவரி மாதம் ஒன்றாம் தேதி ஆணையத்தின் கூட்டம் நடைபெற்றது. இதற்கு முன்னால் ஒவ்வொரு முறையும் என்ன செய்வார்கள் என்றால், மேகதாது அணைப் பிரச்சினையினைக் கொண்டு

2024 பிப்ரவரி 22] *[திரு. துரைமுருகன்]*

வருவார்கள். நாம் எதிர்ப்போம், பிறகு அதை விட்டுவிடுவார்கள். ஒரு முறை என்ன செய்தார்கள் என்று சொன்னால், இதை மற்ற அமைப்புகளுக்குக்கூட அதாவது, Central Water Commission, Forest Department, Environment Department*–க்கும் அனுப்பினார்கள்.* DPR *சரியில்லையென்று எல்லோரும் திருப்பி அனுப்பிவிட்டார்கள். ஒவ்வொரு முறையும் கொண்டு வருவார்கள், நாங்கள் சொன்னால் ஏற்றுக்கொண்டு போய்விடுவார்கள். கடைசியில் ஒரு முறை நானே ஒன்றிய அமைச்சர்களிடம் இவர்கள் ரொம்ப தவறு செய்கிறார்கள் என்று சொன்னபோது, இனிமேல் மேகதாது பிரச்சினையை எடுக்கக் கூடாது என்று ஒரு முடிவு செய்தார்கள். ஆனாலும், அவர்கள் விடுவதாக இல்லை. அதுபோன்று, பிப்ரவரி மாதம் ஒன்றாம் தேதி நடந்த கூட்டத்திலும், இந்தப் பிரச்சினை வந்தது. பிரச்சினை வந்தபோது, நம்முடைய நீர்வளத் துறை* Secretary *அங்கு இருந்தார். ஆரம்ப நிலையிலே இதை நாங்கள் எதிர்த்து இருக்கிறோம் என்று அவர் சொன்னார். இதுகுறித்து வழக்கும் தொடுத்திருக்கிறோம். 2018, 2019, 2022 ஆகிய ஆண்டுகளில் நான்கு வழக்குகள் நாங்கள் ஏற்கெனவே தொடுத்திருக்கிறோம். இதைப் பற்றி பேசக்கூடாது; எடுக்கக்கூடாது என்றெல்லாம் சொல்லியிருக்கிறோம். ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பற்றி நீங்கள் இப்போது விவாதத்திற்கு எடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். இருந்தாலும்,* Cauvery Water Management Authority *இந்தப் பிரச்சினையை அன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துவிட்டார்கள். எடுத்ததற்குப் பிறகு, ஒவ்வொருவரையும் பேச விட்டார்கள். கர்நாடக உறுப்பினர், "உச்ச நீதிமன்றம் இந்தத் திட்டத்திற்கு எந்தத் தடையும் பிறப்பிக்கவில்லை. ஆகையால், இந்தத் திட்டம் பற்றி விவாதித்து, முடிவு எடுத்து* Central Water Commission*–க்கு அனுப்பி வைக்கலாம்" என்று சொன்னார்.* Central Water Commission*–லேயே ஒரு* member *இருக்கிறார். ஒன்றிய அரசின் சார்பில் அவர்* member*–ஆக இருக்கிறார். அவர், "உச்ச நீதிமன்றத்திலிருந்து எந்தவிதமான ஆணையும் நமக்கு இதுவரை கிடைக்கவில்லை. இங்கு இந்தத் திட்டத்தை ஆய்வு செய்ய இயலாது. ஆகையால் திட்ட அறிக்கையை* CWC*–க்கு திரும்ப அனுப்பிவிடலாம்" என்று சொன்னார். கர்நாடகத்தைச் சார்ந்தவர் விவாதத்திற்கு எடுக்கலாம் என்று சொன்னார்.* Central Water Commission*–லிருந்து சென்ற* member *விவாதத்திற்கு எடுக்கக்கூடாது என்று சொன்னார். கேரள உறுப்பினர், "இப்பொருள் விவாதத்திற்கு ஏற்றது அல்ல" என்றும், "இது பன்மாநில நதி நீர் சம்பந்தப்பட்டதால் அதற்கேற்ற அமைப்புதான்*

[திரு. துரைமுருகன்] [2024 பிப்ரவரி 22

ஆய்வு செய்ய வேண்டும்" என்றும் தெரிவித்து, "இந்த மேகதாது திட்ட அறிக்கையை CWC-க்கே திருப்பி அனுப்பிவிடலாம்" என்று அவர் சொல்லிவிட்டார். தற்போது நாம் சொல்லிட்டோம், பாண்டிச்சேரி அரசும் அதேமாதிரி சொல்லிவிட்டது. கேரளா அரசும் சொல்லிவிட்டார்கள். மத்திய சர்க்கார் சார்பில் இருக்கிறவரும் அதே கருத்தைச் சொல்லிவிட்டார். ஆக கர்நாடக உறுப்பினர் ஒருவர் மட்டும்தான் அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார். இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தார்களேயொழிய, எந்தவிதமான ஓட்டெடுப்பும் நிகழவில்லை. கருத்துகளை மட்டும் தெரிவித்தார்கள். இந்தக் கருத்துகளையெல்லாம் கேட்ட ஆணையத்தின் தலைவர் பெரும்பாலான உறுப்பினர்களின் கருத்துகளின்படி "மேகதாது திட்டத்தை CWC-க்கே திருப்பி அனுப்பிவிடலாம். விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடாது" என்று சொல்லிவிட்டார். இவ்வளவு நடந்த பிறகும், எந்த ஆணையத்தின் தலைவர் இதைத் திருப்பி அனுப்பலாம் என்று சொன்னாரோ, அதே ஆணையத்தின் தலைவர் அந்தக் கூட்டத்தில் என்ன நடந்தது என்று கூட்டத்தின் minutes-ஐ நமக்கு அனுப்பினார். அந்த minutes-ல் என்ன எழுதுகிறார்கள் என்றால், அதில்தான் தவறு செய்கிறார்கள். அந்த minutes-ல் மேகதாது திட்டத்திலுள்ள பல்வேறு தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார அம்சங்களைப் பரிசீலித்து, இந்தத் திட்டம் சாத்தியமா, இல்லையா என்று முடிவெடுக்கவும் மற்றும் மேல் நடவடிக்கைக்காகவும் CWC-க்கு அனுப்பவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

நண்பகல் 12-00

கூட்டத்தில் எல்லோரும் சொன்னதற்குப் பிறகு, கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு வேறு; Minutes-ல் வந்த முடிவு வேறு. இந்த Minutes வந்தவுடனே நாம் அதை எதிர்த்து அவர்களுக்கு உடனே தெரிவித்துவிட்டோம். Chairman-க்கும் letter எழுதிவிட்டோம். அதுபற்றி நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். Court-க்கும் செல்லப் போகிறோம். ஆக, இதுமட்டுமல்லாமல், ஜல் சக்தி அமைச்சகம், Forest Department, CWC Chairman ஆகியோருக்கு நம்முடைய துறை Secretary கடிதம் எழுதியிருக்கிறார். இந்தத் திட்டம் தொடர்பான வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும், இந்தத் திட்டம் உச்ச நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படாத திட்டம் என்பதையும், இம்மாநில நதிநீர்த் திட்டத்திற்கு, பன்மாநில

2024 பிப்ரவரி 22] *[திரு. துரைமுருகன்]*

நதிநீர்த் திட்டத்திற்கு படுகை மாநிலங்களிலிருந்து கர்நாடக அரசு இசைவினைப் பெறவில்லை என்பதையும் குறிப்பிட்டு நாங்கள் கடிதங்களை எழுதியிருக்கிறோம். ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். CWC-க்கு அனுப்பிவிடுவதாலேகூட இந்தத் திட்டம் நிறைவேறிட முடியாது. பிறகு, அவர்கள் Forest Department-*ல்* permission *வாங்க வேண்டும். அதற்குப் பிறகு,* Environment Department-*ல் அனுமதி வாங்க வேண்டும். துறைகளிடம் அனுமதி வாங்கினாலும்கூட, தமிழ்நாட்டினுடைய இசைவைப் பெறாமல் அவர்கள் ஒரு செங்கல்லைக்கூட எடுத்துவைக்க முடியாது என்பதை ஆணித்தரமாக இந்த அவையிலே நான் தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கர்நாடகத்திலே ஓர் அரசியலை நடத்துகிறார்கள். ஆக, பி.ஜே.பி. அரசு இருந்த காலத்திலும் இதைத்தான் சொன்னார்கள். காங்கிரஸ் அரசு இருக்கிற காலத்திலும் இதைத்தான் சொல்கிறார்கள். எந்தக் கட்சி எப்போது ஆட்சிக்கு வந்தாலும், யார் ஆட்சிக்கு வந்தாலும், அவர்கள் எடுத்தவுடனே இதைச் சொல்வதுதான் வழக்கம். திரு. சித்தராமையா அவர்கள் எனக்கு மிகவும் வேண்டியவர்தான். அவர் முதலில் திரு. தேவகவுடா அவர்களோடு இருந்தார். அப்போதே அவரோடு சேர்ந்துகொண்டு இந்த மேகதாது திட்டம் குறித்துப் பேசியவர்தான். தற்போது, கர்நாடக மாநில உள் துறை அமைச்சராக இருக்கக்கூடிய திரு. டி.கே. சிவக்குமார் அவர்களுடைய தொகுதி அது. அவர்களும் மேகதாது திட்டம் பற்றி பேசுகிறார். எனவே, ஒன்றை நான் தெளிவாகச் சொல்கிறேன். ஏதோ அவர்கள் பணம் ஒதுக்குகிறோம் என்று சொன்னதாலோ அல்லது "கட்டியே தீருவோம்" என்று வசனம் பேசுவதாலோ, மேகதாதுவில் அணை கட்டிவிட முடியாது. காரணம், நம்முடைய இசைவு இல்லாமல் அவர்கள் எதையும் செய்ய முடியாது. தமிழ்நாட்டில் பிறந்த எவரும் எந்தக் கட்சியாக இருந்தாலும் அதற்கு இசைவினைத் தர மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அஞ்சத் தேவையில்லை. நம்முடைய அம்மையார் அவர்கள், நீங்கள்* alliance *வைத்திருக்கிறீர்களே ஏன் அவர்களோடு பேசக் கூடாதா என்று சொன்னார்கள். பேசக் கூடாது என்பதுதான் திட்டம். காரணம், பேசி, பேசி, பேசி நாங்கள் அலுத்துப் போய்தான்* Tribunal-*ஐயே கொண்டு வந்தோம். இப்போது ஒன்றும் வேண்டாம். அதேபோன்று மார்க்கண்டேய ஆற்றின் குறுக்கே அணை கட்டுவது குறித்தும் நாங்கள் வழக்கு போட்டோம்.* Supreme Court-*ல் சொன்னார்கள். எதற்கு நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள், நீங்கள் ஒரு* Tribunal-*ஐ போட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். உடனே அதைக்*

[திரு. துரைமுருகன்] [*2024 பிப்ரவரி 22*

கெடுப்பதற்கு மறுபடியும் petition *போடுவதற்காகவா! இல்லை, இல்லை. நாங்கள் புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கிறோம், அவர்கள் புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். நாங்கள் பேசிக்கொள்கிறோம் என்று சொன்னோம். ஆனால், மறுபடியும் போட்டிருக்கிறார்கள். அதை எதிர்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கவலைப்படத் தேவையில்லை. அவர்களுக்கு எவ்வளவு அக்கறையும், ஆர்வமும், வேகமும் இருக்கிறதோ, அதே வேகம், அதே அக்கறை, அதே உணர்வு எங்களுக்கும் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) இல்லை, போதும். இதுசம்பந்தமாகவா அல்லது வேறு பொருள் குறித்துச் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது அண்ணா தி.மு.க. அரசு இருந்தபோது ஆணையம் அமைக்கப்படவில்லை என்ற ஒரு தவறான செய்தியை அவையிலே பதிவு செய்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) காவேரி நீர் மேலாண்மை ஆணையத்திற்குத் தலைவர் நியமிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இதுகுறித்து 22 நாட்கள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து, நாடாளுமன்ற அவையே ஒத்திவைக்கப்பட்டது. ஆகவே, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு தலைவரை நியமிப்பதற்கு அண்ணா தி.மு.க அரசு கிட்டத்தட்ட 28 முறை கூட்டம் நடத்தியிருக்கிறது. தலைவர் இல்லாமல் எப்படி கூட்டம் நடத்த முடியும்? காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு தலைவர் இருந்தால்தானே கூட்டம் நடத்த முடியும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கேட்கவில்லை என்று நான் சொல்லவில்லை. நீங்கள்* Parliament*-ல் எதிர்க்கவில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், அவர்கள்* Chairman *போடவில்லை. இப்போதுதான்*

2024 பிப்ரவரி 22] *[திரு. துரைமுருகன்]*

அவர்கள் Chairman போட்டார்கள். இப்போது பிரச்சினை வந்திருக்கிறது. அவ்வளவுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், போதும். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், மேகதாதுவில் அணை கட்டுவது குறித்த பொருண்மை காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தில் விவாதிக்கப்பட்டது தவறு; அது அந்த அமைப்புக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மீறிய செயல் என்று ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவந்து சட்டமன்றத்தில் இதுவரை நிறைவேற்றவில்லை. தீர்மானம் கொண்டுவந்து சட்டமன்றத்தில் நிறைவேற்றி, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்க வேண்டும். ஆகவே, இது வேண்டுமென்றே திட்டமிட்டு, நீங்கள் செயல்படாத காரணத்தினால், அவர்கள் அளித்த பதில் எங்களுக்குத் திருப்தி இல்லாத காரணத்தினால், இன்றைக்கு விவசாயிகளுக்கு **என்ற ஐயம் ஏற்படுவதால், நாங்கள் இதை எதிர்த்து வெளிநடப்புச் செய்கிறோம்.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12-05

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. எஸ். ரகுபதி] [*2024 பிப்ரவரி 22 அவர்களுக்கும், அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், பாராளுமன்றத்தை அவர்கள் 22 நாட்கள் ஏன் முடக்கினார்கள் என்பதை பலமுறை சொல்லியிருக்கின்றேன். அன்றைய பாரதிய ஜனதா கட்சி ஆட்சியின்மீது கொண்டுவரப்படவிருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் (மேசையைத் தட்டும் ஒலி) தடுப்பதற்காகத்தான் அவர்கள் பாராளுமன்றத்தை முடக்கினார்களேதவிர, வேறு எதற்காகவும் அல்ல. அது பலமுறை பதிவு செய்யப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) மீண்டும், மீண்டும் அதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

***மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற ஒரு வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** *என்ற வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ** என்று சொல்கிறார்கள். இந்த அரசு விவசாயிகளுடைய ** என்று சொல்லியிருக்கிறார்கள். ** என்ற ஒரு வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** *என்ற வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். இன்றைக்கு சட்டமன்றக் கூட்டத் தொடரின் கடைசி நாள். பத்திரிகை* news*-ல் வரவேண்டுமென்று*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2024 பிப்ரவரி 22] *[திரு. துரைமுருகன்]*

இவ்வாறு செய்திருக்கிறார்கள். இதுகுறித்து, ஏற்கெனவே, 4 வழக்குகள் போடப்பட்டுள்ளன. இது சம்பந்தமான same *வழக்குதான்.* "The Cauvery Water Management Authority has no power at all to discuss the matter of Mekedatu" *என்று நாங்கள் வழக்கு போட்டிருக்கிறோம். அவர்கள் கூட்டம் நடக்கும்போதும் சொல்கிறார்கள்.* Tooth and nail *நாம் எதிர்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். ஆணையத்தை அமைத்தது* Supreme Court. *அந்த ஆணையத்திற்கு தலைவரை இவர்கள் குறிப்பிட்ட* period*-ல் நியமிக்கவில்லை. நாங்கள் வாதாடி, நாங்கள் பேசி இப்போதுதான், தலைவரை நியமித்த பின்னர்தான், இந்த ஆணையக் கூட்டமே நடைபெற்றிருக்கிறது. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. இது விஷயமாகவா? அல்லது வேறு விஷயமாகவா? வேறு* matter *வேண்டாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், சொல்லுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது ஆட்சி பொறுப்பேற்றபிறகுதான், காவிரி நீர் மேலாண்மை வாரியத்திற்குத் தலைவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், முன்வரிசைத் தலைவர்கள் அனைவரையும் அழைத்துச்சென்றார்கள். ஒன்றிய நீர்ப்பாசனத் துறையின் அமைச்சர் அவர்களை நாங்கள் சந்தித்தோம். நம்முடைய அரசு உரிய நடவடிக்கைகளை முறையாக எடுத்து வருகிறது. உச்ச நீதிமன்றத்திலும் நாம் இதற்காக முறையாக மூத்த வழக்கறிஞர்களைக் கொண்டு வாதாடி வருகிறோம். ஆக இந்தச் சூழலில் பாண்டிச்சேரி, கேரளா, தமிழ்நாடு அரசுகளின் துறைச் செயலாளர்கள் கலந்துகொண்ட கூட்டத்தின்* Minutes*-ஐப் பதிவு செய்த ஆணையத்தின் தலைவர் அவர்கள், அப்போது நம்மை திருப்திபடுத்துவதுபோல்* Minutes*-ல் பதிவு செய்துவிட்டு, முறையாக* Minutes*-ஐ அனைவருக்கும் அனுப்புகிற நேரத்தில் கர்நாடக அரசுக்கு ஆதரவாக அவர் நடந்துகொள்கிறார். ஆதலால், காவிரி நீர் மேலாண்மை வாரியத்தின் இப்போதைய தலைவர் இருக்கின்ற வரையில் தமிழ்நாட்டிற்கு சரியான நீதி, தீர்ப்பு கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. காவிரி நீர் மேலாண்மை வாரியத்தின் தலைவர் ஆணையக் கூட்டத்தில் நேரடியாகப் பேசி எடுக்கப்பட்ட முடிவுக்கு மாறாக* Minutes*-ஐயே மாற்றுகிறார் என்றால், அவர் கர்நாடக அரசுக்குத் துணை போகிறார்; தமிழ்நாட்டு*

[திரு. தி. வேல்முருகன்] [2024 பிப்ரவரி 22 மக்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் துரோகம் இழைக்கிறார். ஆதலால், அவர் தலைமையில் இருக்கின்ற வரையில் நமக்கு நீதி கிடைக்காது என்கிற கருத்தை நாம் வலுவாக உச்ச நீதிமன்றத்தில் எடுத்துவைக்க வேண்டும் என்கிற வேண்டுகோளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு உறுப்பினர்கள் என்ன கேட்கிறார்கள் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் நாங்கள் Supreme Court-ல் சொல்லாமல் இருப்போமா! அவர் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 4-7-2021, 31-3-2022, 26-5-2022 மற்றும் 13-6-2022 ஆகிய தேதிகளில் கடிதங்களும், Minister for Jal Sakthi-க்கு ஒரு கடிதம் என்று ஆணையம் தொடர்பாக இத்தனை கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். அதன் பின்னர்தான், Supreme Court-ல் வாதாடி இந்த ஆணையத்திற்கு ஒரு தலைவரை நியமித்தார்கள். இவையனைத்தையும் மறந்துவிட்டு, இன்று வெளியே செல்ல வேண்டும் என்பதற்காக இங்கு ஒரு நாடகத்தை நடத்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

(ஆ) சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புநிறை பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையில் அது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுவிட்டது. அதற்கு தீர்ப்பு நேற்றையதினம் நான் சொல்லிவிட்டேன். அதனால் நீங்கள் தயவுசெய்து. . . (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.